*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed monthly academic research journal*
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026

**Vol. 12 No. 04 (2026): September 2026**, **p350-360** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper – Peer reviewed* ✓

# தமிழிலக்கியத்தில் சிறார் இலக்கிய வகைமை: ஒரு ஆய்வுப் பார்வை

*Children's Literature Category in Tamil Literature: A Research Perspective*

**முனைவர் சு. பலராமன்,**
தமிழ் உதவிப் பேராசிரியர், எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம்
பன்முக கலை மற்றும் வணிகக் கல்விப்புலம், இராமாபுரம், சென்னை – 89

**Dr. S. Balaraman*,**
*Assistant Professor of Tamil,*
*SRM Institute of Science and Technology*
*Faculty of Science and Humanities,*
*Ramapuram, Chennai – 89*
*Contact No: 9942329290* | *Email: balaramanaavin@gmail.com* .

***Article history***
Received: 20-08-2026
Revised: 01-09-2026
Accepted: **08-09-2026**
Published on: **08-09-2026**

*Corresponding Author
Email:
*balaramanaavin@gmail.com*

**Abstract:**
In its historical journey of over two thousand years, Tamil literature has developed various literary genres. Branching into several sub-forms under the two major divisions of traditional and modern literature—such as Sangam literature, didactic literature, epic literature, devotional literature, minor literature (Chittrilakkiyam), and contemporary literature—the category of 'Children's Literature', which focuses on children and adolescents, originated in Tamil at the end of the nineteenth century and grew into a distinct genre during the twentieth century. This article historically analyzes the origin, development, pioneers, journalistic contributions, thematic shifts, and awards associated with children's literature from the era of Tolkappiyar to the present day.

**Keywords:** *Tamil Literature, Children's Literature, Literary Category/Genre, Child Literature, Tolkappiyam, Bala Sahitya Puraskar*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

## சுருக்கம் (Abstract)

தமிழிலக்கியம் ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலான தன் வரலாற்றுப் பயணத்தில் பல்வேறு இலக்கிய வகைமைகளைத் தன்னகத்தே உருவாக்கிக் கொண்டு வந்துள்ளது. மரபிலக்கியம், நவீன இலக்கியம் என இரு பெரும் பிரிவுகளுக்கு உள்பட்டு, சங்க இலக்கியம், அற இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், தற்கால இலக்கியம் எனப் பல கிளை வடிவங்களை உருவாக்கிக் கொண்டுள்ள தமிழில், குழந்தைகளையும் சிறார்களையும் முதன்மைப்படுத்திய 'சிறார் இலக்கியம்' எனும் வகைமை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கி இருபதாம் நூற்றாண்டில் தனி வகைமையாக வளர்ச்சி பெற்றது. இக்கட்டுரை, தொல்காப்பியர் காலம் தொட்டு இன்று வரை சிறார் இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி, முன்னோடிகள், இதழியல் பங்களிப்பு, கருப்பொருள் மாற்றங்கள், விருதுகள் ஆகியவற்றை வரலாற்று அடிப்படையில் ஆய்வு செய்கிறது.


திறவுச்சொற்கள்: *தமிழிலக்கியம், சிறார் இலக்கியம், இலக்கிய வகைமை, குழந்தை இலக்கியம், தொல்காப்பியம், பால சாகித்ய புரஸ்கார்.*

## 1. முன்னுரை

தமிழ் ஓலைச்சுவடித் தமிழ், கல்வெட்டுத் தமிழ், செப்பேடுத் தமிழ், அச்சுத் தமிழ், கணினித் தமிழ், ஊடகத் தமிழ் எனக் காலத்திற்கேற்றவாறு தன்னைத் தகவமைத்து வரும் மொழியாகத் திகழ்கிறது. அதேபோல் இயல், இசை, நாடகம் என்கின்ற இம்மூன்றையும் அடிநாதமாகக் கொண்டு முத்தமிழாகவும் விளங்கி வருகிறது. தமிழ் தன் இலக்கிய வடிவங்களில் கதை, கவிதை, உரைநடை, நாடகம் என்பனவற்றை உள்வாங்கியுள்ளது. அவ்வடிவங்களும் காலத்திற்கேற்பக் கிளை வடிவங்களாக விரிந்து கொண்டு செல்கின்றன. கடந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலான தமிழ்மொழி பல்வேறு இலக்கிய வகைமைகளையும் தன்னகத்தே முளைவிட்டிருக்கிறது. இப்படியாகத் தமிழ் தன்னைத் தகவமைத்துக் கொள்வதில் முதல்மொழியாகவும் மூத்த மொழியாகவும் உள்ளது. தமிழிலக்கியம் மரபிலக்கியம் மற்றும் நவீன இலக்கியம் என இரு பெரும் பிரிவுகளாகக் கவனம் பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழியில் பல புது இலக்கிய வகைகள் உருவாக்கப்பட்டுத் தமிழிலக்கியப் படைப்புகள் விரிந்துகொண்டே செல்கின்றன. அதன்பால், சிறார் இலக்கிய வகைமை குறித்துக் காண விழைகிறது இக்கட்டுரை.

## 2. இலக்கிய வகைமை என்னும் கருத்தாக்கம்

இலக்கியத்தின் புற அமைப்பையும் (யாப்பும் அமைப்பும்) அக அமைப்பையும் (இலக்கியப் போக்கு, குறிப்பு, பொருள்) கொள்கை அளவில் அடிப்படையாகக் கொண்டு இலக்கியப் படைப்புகளை


| Copyright © Author(s)

வகைமை செய்வதே இலக்கிய வகைமையாகும். இலக்கியத்தை வகை செய்வதற்குரிய வெளிப்படையான அடிப்படை இந்த இரண்டில் ஒன்றாக அமையலாம் என்கிறார் இலக்கியக் கோட்பாட்டாளர் ரெனி வெல்லக் (Wellek). மேலும், இலக்கிய நூல்களைக் கொள்கை அடிப்படையில் வகைமைகளாகப் பகுக்க முடியும் எனவும் அவர் வலியுறுத்துகிறார் (Wellek). அதன்பால், இலக்கியம் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிற நெறியே வகைமை வளர்ச்சியாகக் காணமுடிகிறது.

### 3. தமிழிலக்கிய வகைமைப் பிரிவுகள்

வளர்ச்சி பெறும் ஒரு மொழியில் இலக்கியங்களும் வளம் பெறும். வளம்பெறும்போது அதில் வகை வகையாய்ப் புதுமைகள் தோன்றுவது இயல்பாகும். அந்த அடிப்படையில் தமிழில் சங்க இலக்கியம், அற இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், இக்கால இலக்கியம் எனப் பகுக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கிய வகைமையில் பண்டைக்காலத் தமிழர்களின் வாழ்க்கை முறையைப் பாடும் பாடல்கள் அமைந்துள்ளன. அற இலக்கிய வகைமையில் மனிதனின் ஒழுக்கத்தை வலியுறுத்தும் செய்யுள்கள் (நீதி நூல்கள்) இடம்பெற்றுள்ளன. காப்பிய இலக்கிய வகைமையில் கதை அமைப்பைக் கொண்ட நீண்ட நெடிய பாடல்களும் தனி மனிதனைத் தனிப்பெரும் தன்மையில் பாடுவதாக உள்ளன. பக்தி இலக்கிய வகைமையில் இறைவனைப் போற்றிப் பாடும் பாடல்கள் முழுமையும் உள்ளன. சிற்றிலக்கிய வகைமையில் குறுகிய பாக்களால் பாடப்படும் இலக்கியங்களாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. தற்கால இலக்கிய வகைமையில் உரைநடை மற்றும் புதிய வடிவங்களில் எழுதப்படும் படைப்புகளாக உள்ளன. படம் 1இல் இவ்வாறு காணப்படும் ஆறு முதன்மை வகைமைப் பிரிவுகள் காட்டப்பட்டுள்ளன.

| Copyright © Author(s)




படம் 1: பாரம்பரியத் தமிழிலக்கியத்தின் ஆறு முதன்மை வகைமைப் பிரிவுகள்

இவ்விலக்கிய வகைமைகள் வாழ்வின் பல்வேறு கூறுகளை எடுத்தியம்புகின்றன. இப்பாரம்பரியப் பிரிவுகளுக்கு அப்பால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமூக மாற்றங்களால் புதிதாகத் தோன்றிய வகைமைகளுள் ஒன்றே சிறார் இலக்கியமாகும்.

## 4. தொல்காப்பியத்தில் பதிவாகும் இலக்கிய வகைமைகள்

தமிழின் முதன்மை இலக்கண நூலான தொல்காப்பியம், செய்யுளியல் பகுதியில் இலக்கிய வகைமை குறித்துப் பதிவு செய்துள்ளது:

*"பாட்டு, உரை, நூலே வாய்மொழி, பிசியே*
*அங்கதம், முதுசொல் அவ்வேழ் நிலத்தும்*
*வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்*
*நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்*
*யாப்பின் வழியது என்மனார் புலவர்" (தொல். செய்யுளியல். 78)*

இந்நூற்பாவில் ஏழு வகையான இலக்கியங்கள் கூறப்படுகின்றன: 1. பாட்டு — இசைப்பாடல்கள் (எ.கா. பரிபாடல், கலிப்பா); 2. உரை — உரைநடை வடிவங்கள்; 3. நூல் — இலக்கண இலக்கிய நூல்கள்; 4. வாய்மொழி — மந்திரங்கள், சடங்கு மொழிகள்; 5. பிசி — உவமையை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் விடுகதைப்பாட்டு வகை; 6. அங்கதம் — வசைப்பாட்டு வகை; 7. முதுசொல் — பழமொழி வகை. இவற்றுள் 'பிசி' எனும் விடுகதை வகையே

சிறார்களுக்கான இலக்கிய வகைமைக்கான தொடக்கப் புள்ளியாகக் கருதப்படுகிறது (இளம்பூரணர்).

### 5. சிறார் இலக்கியத்தின் தோற்ற வேர்களும் தொடக்கமும்

சிறார் இலக்கிய வரலாறு சங்க இலக்கிய எட்டுத்தொகை நூலான அகநானூற்றின் 54ஆவது பாடலில் தொடங்குவதாகக் கூறப்படுகிறது:

*"முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்!*
*பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி*
*வருகுவை ஆயின் தருகுவென் பால்" என*
*விலங்க அமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றி*
*திதலை அல்குல் எம் காதலி*
*புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே! (அகநானூறு, பாடல் 54)*

இவ்வடிகள், மகனுக்காகப் பொய் சொல்லி நிலாவை அழைக்கும் தாய் நிலையைத் தேர்ப்பாகனுக்குத் தந்தை உரைப்பதாய்க் காட்டும் காட்சி. முகிழ்த்து ஒளிகாட்டும் மூன்றாம் பிறை நிலவை, பொன்னாலான தாலியை அணிந்திருக்கும் தன் மகனோடு விளையாட வருமாறு அழைத்து, வந்தால் பால் தருவதாகப் புதல்வனுக்காகப் பொய்யுரைக்கும் தாயின் உளவியலை இப்பாடல் படம்பிடிக்கிறது. இதுவே குழந்தை மையப்படுத்தப்பட்ட தமிழிலக்கியத்தின் தொடக்கப் புள்ளியாகக் கருதப்படுகிறது.

சங்க காலத்திற்குப் பின்னான இடைக்காலத்தில் ஔவையார் எழுதிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலகநாதர் எழுதிய உலக நீதி, அதிவீரராம பாண்டியர் எழுதிய நூல்கள் குழந்தை இலக்கியமாகக் கருதப்படுகின்றன. எனினும் திருக்குறள், நாலடியார் போன்ற அடி குறைந்த இலக்கியங்கள் சிறார்களுக்கானவை என்பதைச் சிறார் இலக்கியவாதிகள் பலரும் ஏற்க மறுக்கின்றனர் என்பதும் இங்குக் கவனத்திற்குரியது.

### 6. பத்தொன்பதாம் நூற்றாண்டு மறுமலர்ச்சியும் சிறார் இலக்கியத் தொடக்கமும்

பத்தொன்பதாம் நூற்றாண்டு இந்தியத் துணைக்கண்டத்தின் சமூக வாழ்விலும் இலக்கிய உலகிலும் மறுமலர்ச்சிக் காலம் என்று கூறப்படுகிறது. இம்மறுமலர்ச்சிக்கு உரிய அடிப்படையான காரணம் ஆங்கிலேயர் இந்திய மக்களுக்கு வகுத்தளித்த கல்விக் கொள்கையே ஆகும். இப்புதிய திட்டத்தை வகுத்தவர் மெக்காலே. 1835இல் வெளியிடப்பட்ட இக்கல்விக் கொள்கை இந்தியத் துணைக்கண்டத்தின் சமூக, இலக்கியக் கோட்பாடுகளில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது.

இம்முறையில் புதிய கல்வி பெற்ற உயர் மக்கள் பிரிவு ஒன்று இந்தியாவில் உருவானது. அதனால் படிக்கும் ஆர்வம் மிகுந்தது; இலக்கியங்களும் புதிது புதிதாகத் தோன்றத் தொடங்கின. ஆங்கிலக் கல்வி பெற்ற நடுத்தர மக்களிடையே இருந்து புதிய இலக்கியப் படைப்பாளர்களும் தோன்றினர். இதனால் புதிய இலக்கிய வகைகளும் இயல்பாய்த் தோன்றி வளர்ந்தன. தொடக்கத்தில் 'குழந்தை இலக்கியம்', 'சிறுவர் இலக்கியம்' என வழங்கப்பட்ட இவ்வகைமை, தற்போது 'சிறார் இலக்கியம்' என முன்மொழியப்படுகிறது.

### 7. கவிமணி தேசிய விநாயகமும் சிறார் இலக்கியத் தொடக்கமும்

கவிமணி தேசிய விநாயகம் (1876–1984) 1901ஆம் ஆண்டிலேயே குழந்தைகளுக்காகப் பாடல்களை எழுதத் தொடங்கினார். சிறார்களுக்காக முதன்முதலாகத் தொடர்ச்சியாகப் பாடல்களை எழுதியவர் இவரே. அறுபது பாடல்களைத் தொகுத்து 'குழந்தைச் செல்வம்' என்ற பெயரில் நூலாக வெளியிட்டார். இந்நூல் மத்திய அரசின் பரிசும் பெற்றது. கவிமணியின் இச்செயல்பாடு சிறார் இலக்கிய வரலாற்றுக்குத் தொடக்கமாக அமைந்தது. அதன்பால், சிறார் இலக்கிய வகைமை இருபதாம் நூற்றாண்டில் கவிமணியிடம் தொடங்கியது என்று பல சிறார் எழுத்தாளர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். மேலும் இவரே 'சிறார் இலக்கியத்தின் தந்தை' என்றும் அழைக்கப்படுகிறார் (“சிறார் இலக்கியத்தின் தந்தை”).

கவிமணியின் எளிய மொழிநடையும் சந்த ஓசையும் கொண்ட ஒரு பாடலைக் காண்போம்:

*தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு – அங்கே*
*துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி!*
*அம்மா என்றுமே கத்தும் பசு – அதை*
*அண்டியே ஓடுது கன்றுக் குட்டி!*

*நன்றாகப் பாலில் கறந்திடுவோம் – நாம்*
*நாளும் அருந்திடுவோம் சுவையான பால்!*
*கன்றினை ஈன்ற பசுவின் பால் – நமக்குத்*
*தந்திடும் ஊட்டச் சத்தான பால்!*

*பிள்ளைகள் நன்கு வளர்ந்திடவே – இந்த*
*பெற்ற பசுவளிக்கும் இனிய பால்!*
*கள்ளமில்லா உள்ளம் கொண்டிடுவோம் – நாம்*

*காலையும் மாலையும் பால் பருகுவோம்!*

## 8. தொடர் முன்னோடிகளும் பங்களிப்பாளர்களும்

கவிமணிக்குப் பின்னர் பாரதியார், பாரதிதாசன், சுத்தானந்த பாரதி, மின்னூர் ஸ்ரீனிவாசன் ஆகியோர் சிறுவர்களுக்காகப் படைப்புகளை அளித்தனர். தமிழ்ப் பாட நூல்களுக்குப் பாடல் எழுதுபவர்களாக நமச்சிவாயம், மயிலை சிவமுத்து, மணி, திருநாவுக்கரசு, மு. வரதராசன் ஆகியோர் செயல்பட்டனர். பெண்களின் பங்களிப்பும் மிகுதியாக அமைந்தது; அவர்களுள் ஆர். பொன்னம்மாள், சரளா ராசகோபாலன், ராஜேஸ்வரி கோதண்டம், விமலாராணி, ஜெயந்தி நாகராசன், ஜோதிர்லதா, கிரிஜா, சந்திர மௌலி, புதுச்சேரி தமிழ்மொழி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். நமச்சிவாய முதலியார், மணி திருநாவுக்கரசு, பெரியசாமி தூரன், சக்தி வை. கோவிந்தன், தமிழ்வாணன், ஆர்.வி. (ஆர். வெங்கட்ராமன்), தம்பி ஸ்ரீனிவாசன், லெமன், திருச்சி பாரதன், நா.ரா. நாச்சியப்பன், கே.ஆர். வாசுதேவன், பி.வி. கிரி, அணில் அண்ணா உமாபதி, அரிமதி தென்னகன், மதிஒளி சரஸ்வதி, நெல்லை ஆ. கணபதி, ஆலந்தூர் கோ. மோகனரங்கன் கூத்தபிரான், வாண்டு மாமா, ந. தெய்வசிகாமணி, முல்லை தங்கராஜன், சவுந்தர், மாயூரன், தங்கமணி, பூவண்ணன் ஆகியோரும் இவ்வகைமையை வளப்படுத்தினர் (பூவண்ணன்).

## 9. அழ. வள்ளியப்பாவும் குழந்தை எழுத்தாளர் சங்கமும்

அழ. வள்ளியப்பா சிறார்களுக்காக முழுநேர எழுத்தாளராக இயங்கியவர். அவர் பாடல்கள், கதைகள், புதினம் உள்ளிட்ட வடிவங்களில் எழுதினார்; 1000க்கும் மேலான பாடல்களை எழுதியுள்ளார். இவரது படைப்புகளுள் மல்லிகை (பாடல்), மிருகங்களுடன் மூன்று மணி, மூன்று பரிசுகள், ரோகந்தாவும் நந்திரியாவும், ரோஜாச் செடி (கதை), வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம், வாழ்க்கை விநோதம், விடுகதை விளையாட்டு, வித்தைப் பாம்பு (மொழிபெயர்ப்புக் கதை), வெளிநாட்டு விடுகதைகள், வேட்டை நாய் ஆகியவை குறிப்பிடத்தக்கன. மொத்தம் 11 பாடல் தொகுதிகள், 12 புதினங்கள், 9 கட்டுரை நூல்கள், 1 நாடகம், 1 ஆய்வு நூல், 2 மொழிபெயர்ப்பு நூல்கள், 1 தொகுப்பு நூல் ஆகியவற்றை வெளியிட்டுள்ளார். மேலும், அவர் குழந்தை எழுத்தாளர்கள் பலரைத் திரட்டி 15 ஏப்ரல் 1950இல் 'குழந்தை எழுத்தாளர் சங்க'த்தை நிறுவினார்; இதன் முதல் தலைவராகச் சக்தி வை. கோவிந்தன் இருந்தார். அவரைத் தொடர்ந்து வள்ளியப்பா இச்சங்கத்தின் காரியதரிசியாகவும், தலைவராகவும், வழிகாட்டியாகவும் செயல்பட்டார். இச்சங்கத்தின் வாயிலாகப் புத்தகக் காட்சி, குழந்தை நாடகவிழா, நூல் வெளியீடு, குழந்தை எழுத்தாளர்களை அடையாளப்படுத்துதல் போன்ற செயல்பாடுகள் நடைபெற்றன. 1959 முதல்


1987 வரை எட்டு 'குழந்தைகள் இலக்கிய மாநாடு'களையும் இச்சங்கம் நடத்தியுள்ளது.

குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவின் பாடல்களின் தாக்கம் குறித்த ஒரு சுவையான நிகழ்வு பதிவாகியுள்ளது. கொத்தமங்கலம் சுப்பு அவரைக் காணச் சென்றபோது, தன் பேரனும் ஒரு குழந்தைக் கவிஞர் எனத் தெரிவித்து, "பாட்டி பாட்டி பாட்டி, பாட்டி சேலையை ரெண்டாக் கிழிச்சா, வேட்டி வேட்டி வேட்டி" என்ற பாடலைப் பேரனிடம் படிக்கச் செய்தார் என்பது வழக்கில் உள்ள குறிப்பு. இந்நிகழ்வு, குழந்தைக் கவிஞரின் பாடல்கள் சிறார்களைத் தானும் படைக்கும் ஆற்றல் கொண்டவர்களாக உருவாக்கியதற்குச் சான்றாகக் காட்டப்படுகிறது. வள்ளியப்பா பரம்பரையில் நாரா. நாச்சியப்பன், ஈரோடு தமிழன்பன், முடியரசன், வாணிதாசன் ஆகியோரையும் குறிப்பிடுவர்.

## 10. சிறார் இதழ்களும் பதிப்பகங்களும்

1947 முதல் 1955 வரை 50க்கும் மேற்பட்ட சிறுவர் இதழ்கள் வெளிவந்தன. கண்ணன், அணி, கரும்பு, அம்புலி மாமா, கோகுலம் ஆகியவை 5000 பிரதி அளவில் விற்பனையாகின. சிறுவர் மணி, சிறுவர் மலர், தங்க மலர், தினமலர் பட்டம், மாயா பஜார், கோகுலம், துளிர், பாலர் பூங்கா, சுட்டி விகடன், பெரியார் பிஞ்சு ஆகிய இணைப்பிதழ்களும் வெளிவந்தன. தும்பி, வண்ணநதி, சிலேட்டு, இறக்கை, கற்றல் இனிது, மின்மினி, மேன்மை, துளிர், பொம்மை, அறிவியல் இயக்கம், பஞ்சு மிட்டாய், சுட்டியானை, குட்டி ஆகாயம் போன்ற இதழ்கள் இன்றும் சிறார்களுக்காக வெளிவருகின்றன. புக்ஸ் பார் சில்ரன், ஓங்கில் கூட்டம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சிக்த் சென்ஸ், ப்ரோடிகி, தேசாந்திரி, நீல வால் குருவி, பழனியப்பா பிரதர்ஸ், சுட்டியானை, காக்கைக் கூடு, குட்டி ஆகாயம் போன்ற பதிப்பகங்களும் இவ்வகைமையை முன்னெடுத்துச் செல்கின்றன.

முதல் சிறுவர் இதழான பால தீபிகை 1840இல் வெளிவந்தது. முதல் சிறுவர் பாடல் நூல் கவிமணியால் தொகுக்கப்பட்டு 1901இல் வெளியானது. முதல் பாப்பாப் பாட்டு பாரதியாரால் 1915இல் எழுதப்பட்டது. முதல் சிறுவர் நூல் கண்காட்சி 1950இல் நடைபெற்றது. சிறுவர்களுக்கான முதல் நாடகப்போட்டி 1957இல் நடத்தப்பட்டது. முதல் தினசரி வை. கோவிந்தன் முயற்சியால் 1957இல் வெளிவந்தது. 'குழந்தை எழுத்தாளர்கள் யார்? எவர்?' எனும் நூல் 1972இல் வெளிவந்தது (பதி). இம்மைல்கற்கள் படம் 2இல் காலவரிசைப்படி தொகுக்கப்பட்டுள்ளன.




படம் 2: தமிழ்ச் சிறார் இலக்கிய வரலாற்றின் முக்கியமான காலகட்டக் குறிப்புகள் [1] 1835 – மெக்காலேயின் கல்விக் கொள்கை [2] 1901 – கவிமணியின் முதல் குழந்தைப் பாடல்கள் [3] 1915 – பாரதியாரின் 'பாப்பாப் பாட்டு' [4] 1950 – குழந்தை எழுத்தாளர் சங்கம் தோற்றம் [5] 1950 – முதல் சிறுவர் நூல் கண்காட்சி [6] 1957 – முதல் சிறுவர் நாடகப்போட்டி [7] 1972 – 'குழந்தை எழுத்தாளர்கள் யார்? எவர்?' நூல் [8] 2010 – பால சாகித்ய புரஸ்கார் விருது தொடக்கம்

மேலும், பூவண்ணன் எழுதிய குழந்தைப் பாடல்கள், இரா. காமராசும் கிருங்கை சேதுபதியும் இணைந்து தொகுத்த சிறுவர் கதைகள், கிருங்கை சேதுபதியின் சிறுவர் கதைப் பாடல்கள் ஆகியவை புதிய சிறார் எழுத்தாளர்களுக்கு ஆவணமாகவும் வழிகாட்டியாகவும் திகழ்கின்றன.

## 11. தற்காலத் தமிழ்ச் சிறார் இலக்கியமும் கருப்பொருள் மாற்றங்களும்

தற்காலத்தில் ஆயிசா நடராஜன், சுகுமாரன், செல்ல கணபதி, ஆதி வள்ளியப்பன், வனிதாமணி, கமலாலயன், இனியன், சாலை செல்வம், பாலபாரதி, பஞ்சுமிட்டாய் பிரபு, திவ்யா, விழியன், விஷ்ணுபுரம் சரவணன், யூமா. வாசுகி, இ.பா. சிந்தன், இளங்கோ, உதயசங்கர், பெ. சசிக்குமார், ஹேமபிரபா, நாராயணி சுப்ரமணியன், ரமணி போன்றோர் மிகத் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றனர். சாதியக் கட்டமைப்பு உடைப்பு, வர்க்கப் போராட்டம், விளிம்புநிலை மனிதர்களின் குரல், பெண்களின் தன்னாட்சி, சம உரிமை, மாற்றுப் பாலினத்தவரின் வாழ்வியல் தேடல்கள், இயற்கைச் சுரண்டலுக்கு எதிரான எச்சரிக்கை, புவி விழிப்புணர்வு, அறிவியல், தொழில்நுட்பம் போன்ற கருப்பொருள்களில் சிறார் படைப்புகள் வெளிவருகின்றன. சமகாலத்தில் சிறார்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் இவை முதன்மையாகக் கொண்டுள்ளன

(விஷ்ணுபுரம் சரவணன்).

விஷ்ணுபுரம் சரவணனின் பதிவின்படி, ஆயிசா நடராஜன் எழுதிய 1729 எனும் நூல் புற்றுநோயால் அல்லற்படும் சிறார்களின் உலகத்தைக் கதை மையமாகக் கொண்டுள்ளது. பாலபாரதியின் மரப்பாச்சி சொன்ன கதை, சிறுவர்கள் மீது பெரியவர்கள் மற்றும் உறவினர்கள் செய்யும் பாலியல் வன்முறையை மையப்படுத்துகிறது. கொ.மா.கோ. இளங்கோவின் சஞ்சீவி மாமா, மலம் அள்ளும் ஒருவரை நடுத்தரச் சாதியில் பிறந்த ஒரு குழந்தை 'மாமா' என அழைப்பதைக் கதை மையமாகக் கொண்டது. யூமா வாசுகியின் தூய கண்ணீர் சாதியத்தின் வீரியத்தை மையமாகக் கொண்டது. விஷ்ணுபுரம் சரவணனின் ஒற்றைச் சிறகு ஓவியா, சூழலியல் சீர்கேட்டை மையப்படுத்துகிறது. உதயசங்கரின் மாயக்கண்ணாடி, ஜங்க் ஃபுட் வழி பாரம்பரிய உணவு முறை பற்றிய பகடியை மையமாகக் கொண்டது. விழியன் எழுதிய மலைப்பூ, கல்வியை எக்காலத்திலும் கைவிடக்கூடாது என்று போராடும் மலைவாழ் சிறுமி பற்றியது (விஷ்ணுபுரம் சரவணன்).

பூவண்ணன் எழுதிய சிறுவர் இலக்கிய வரலாறு (1980), ஆர்.வி. பதி தொகுத்த தற்கால சிறார் எழுத்தாளர்கள் மற்றும் குழந்தை எழுத்தாளர் யார்? எவர்? எனும் நூல், பெ. தூரன் தொகுத்து எழுதிய சிறுவர் கதைக் களஞ்சியம் ஆகியவை சிறார் இலக்கியம் குறித்த அடிப்படையை அறிவதற்கு வாசிக்க வேண்டிய நூல்களாக விளங்குகின்றன (பூவண்ணன்; பதி; தூரன்).

## 12. விருதுகளும் அங்கீகாரங்களும்

2000க்குப் பிறகு குழந்தை இலக்கியத்திற்கான பரிசளிப்பு மூலம் சிறார் இலக்கிய வகைமை கவனத்திற்குள்ளாவது குறிப்பிடத்தக்கது. பரிசளிப்பில் கலை இலக்கிய மன்றம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம், கவிதை உறவு, தமிழ் வளர்ச்சித் துறை ஆகியவை முக்கியப் பங்காற்றுகின்றன. மத்திய அரசால் வழங்கப்படும் சாகித்ய அகாதெமி விருது, சிறார் இலக்கிய வகைமைக்குப் 'பால சாகித்ய புரஸ்கார்' விருது என்ற பெயரில் 2010ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. முதல் பால சாகித்ய புரஸ்கார் விருது பெற்ற நூலாக மா. கமலவேலனின் அந்தோணி ஆட்டுக்குட்டி சிறுவர் புதினம் விளங்குகிறது. மேலும், கோதண்டம், விஷ்ணுபுரம் சரவணன், யூமா. வாசுகி, ஆயிசா நடராஜன், கிருங்கை சேதுபதி, தேவி நாச்சியப்பன், ரேவதி, வேலுசரவணன், செல்ல கணபதி, முருகேசு, குழ. கதிரேசன் ஆகியோரும் இவ்விருதைப் பெற்றுள்ளனர். இவ்விருது குறித்தும் இவ்விருது பெற்ற படைப்புகள் குறித்தும் ஞா. கலையரசி எழுதிய பால சாகித்ய புரஸ்கார் விருது வென்ற படைப்புகள் 2010-2024 எனும் நூலைப் பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ளது (கலையரசி).

## 13. முடிவுரை

தொல்காப்பியர் காலத்தில் 'பிசி' எனும் விடுகதை வடிவில் தொடங்கிய சிறார்மைய இலக்கியப் போக்கு, சங்க இலக்கியத்தின் அகநானூறு வழியாகக் கடந்து, பத்தொன்பதாம் நூற்றாண்டு மறுமலர்ச்சிக் காலத்தில் புதிய கல்விக் கொள்கையின் விளைவாக ஒரு தனி இலக்கிய வகைமையாக வடிவம் பெற்றது எனலாம். கவிமணி தேசிய விநாயகத்திடமிருந்து தொடங்கி, பாரதியார், அழ. வள்ளியப்பா வழியாக இன்றைய விஷ்ணுபுரம் சரவணன், யூமா. வாசுகி, ஆயிசா நடராஜன் போன்ற படைப்பாளர்கள் வரை நீளும் இந்த வகைமை, காலந்தோறும் தன் கருப்பொருள்களையும் வடிவங்களையும் புதுப்பித்துக் கொண்டு வளர்ந்து வந்துள்ளது. சிறுவர் இதழ்கள், பதிப்பகங்கள், குழந்தை எழுத்தாளர் சங்கம் போன்ற நிறுவன அமைப்புகளும், பால சாகித்ய புரஸ்கார் போன்ற தேசிய அங்கீகாரங்களும் இவ்வகைமையின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றுள்ளன. சாதி, வர்க்கம், பாலினம், சூழலியல் போன்ற சமகாலப் பிரச்சினைகளை முன்னிறுத்தும் இன்றைய சிறார் இலக்கியப் படைப்புகள், இவ்வகைமை இன்னும் விரிவடையக்கூடிய ஆற்றல் மிக்கது என்பதை உறுதிப்படுத்துகின்றன. எனவே, சிறார் இலக்கிய வகைமை குறித்த ஆழமான ஆய்வுகள் இன்னும் மேற்கொள்ளப்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

## Works Cited (பார்வை நூல்கள் – MLA பாணி)

[1.] இளம்பூரணர். தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் இளம்பூரணர் உரை. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், 1985.

[2.] கம்பர் விலாஸ் புக் ஹவுஸ் (பதிப்பு). அகநானூறு மூலமும் உரையும். கம்பர் விலாஸ் புக் ஹவுஸ், 1920.

[3.] கலையரசி, ஞா. பால சாகித்ய புரஸ்கார் விருது வென்ற படைப்புகள் 2010-2024. பாரதி புத்தகாலயம், 2024.

[4.] தமிழ் இணையக் கல்விக்கழகம். Tamil Digital Library, tamildigitallibrary.in. Accessed 11 Sept. 2026.

[5.] தமிழ் வளர்ச்சிக் கழகம். குழந்தைகள் கலைக்களஞ்சியம். தமிழ் வளர்ச்சிக் கழகம், 1974.

[6.] தூரன், பெ. சிறுவர் கதைக்களஞ்சியம். பழனியப்பா பிரதர்ஸ், 2009.

[7.] பதி, ஆர்.வி. தற்கால சிறார் எழுத்தாளர்கள். நிவேதிதா பதிப்பகம், 2005.

[8.] பிரபு, பஞ்சுமிட்டாய், தொகுப்பாசிரியர். நவீனத் தமிழ்ச் சிறார் இலக்கியம் நோக்கமும் அதன் பாதையும். புக்ஸ் ஃபார் சில்ரன், 2024.

[9.] பூவண்ணன். சிறுவர் இலக்கிய வரலாறு. வானதி பதிப்பகம், 1980.

[10.] Project Madurai. projectmadurai.org. Accessed 11 Sept. 2026.

[11.] விஷ்ணுபுரம் சரவணன். "தற்கால சிறார் இலக்கியப் படைப்புகள் குறித்த பதிவு." சமூக ஊடகப் பதிவு, 2020-2023 காலப்பகுதி.

[12.] "சிறார் இலக்கியத்தின் தந்தை." Panchumittai, 10 Oct. 2020, www.panchumittai.com/2020/10/10/post_324/.

[13.] செம்மொழித் தமிழ் மத்திய நிறுவனம். செம்மொழித் தமிழ் மின் நூலகம். Accessed 11 Sept. 2026.

[14.] அண்ணா நூற்றாண்டு நூலக அறக்கட்டளை. அண்ணா நூற்றாண்டு மின் நூலகம். Accessed 11 Sept. 2026.

[15.] Wellek, René, and Austin Warren. Theory of Literature. 3rd ed., Harcourt, Brace & World, 1956.

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர், இக்கட்டுரையின் ஆய்வு, தரவுச் சேகரிப்பு, பகுப்பாய்வு அல்லது பிரசுரம் தொடர்பான எந்தவொரு நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட அமைப்புகளுடனும் எந்தவிதமான நலன்சார் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என்று இதன்மூலம் உறுதியளிக்கிறார்.

*The author(s) declare that there is no conflict of interest — financial, personal, or otherwise — associated with the research, authorship, or publication of this article. The findings and conclusions presented here are the result of independent academic research and were not influenced by any external organization, funding body, or third party. No funding was received for the preparation of this manuscript.*